

# அமரர்
# சோமசுந்தரம் விக்னேஸ்வரன்
அவர்களின் சிவபதப்பேறு குறித்த
# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அமரர்

# திரு.சோமசுந்தரம் விக்னேஸ்வரன்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

மாந்தருள் மாணிக்கமாய் பேரொளி வீசிய வண்ணம்

மாண்புடன் வாழ்ந்து இனியன சிந்தித்து இன்சொற்

பேசி அன்புடன் எமைப் பேணிப் பாதுகாத்து

பண்புடனும், இன்முகத்துடனும் வையகத்தில்

பார் போற்றும் வண்ணம் வாழ வழிசமைத்து தந்து


சொல்லாலும் செயலாலும் எமை வளர்த்து இன்று

சொல்லொணாத்துயர் அளித்து வானுறையும்

தெய்வமாகிவிட்ட எமது அன்புத் தெய்வத்தின்

திருப்பாதங்களுக்கு இம்மலரை

காணிக்கையாக்குகின்றோம்.



இங்ஙனம்,

மனைவி, மகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



தோற்றம்
31.10.1955

மறைவு
13.10.2012

அமரர்

# சோமசுந்தரம் விக்னேஸ்வரன்

## திதி வெண்பா

பிறப்பென்றோர் பெருங்கடலில் மானிடனாய்ப் பிறந்து
அறவழியில் அன்புடனே அவனிவாழ்வை முடித்து
இறப்பென்றோர் பேர்சூடி விக்னேஸ்வரன் மறைந்ததிதி – மனம்
மறந்திடா நந்தன தமிழ் புரட்டாதி பிரதமை என்றே துதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தோத்திர பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

கற்பகமே நல்லமுதே கண்ணாக ஞானமுற
நற்பதத்தில் நாட்டும் நவநிதியே - பொற்சுடராம்
நல்ல பேரின்பம் நண்ணச்சிவராசா
வல்ல நல்ல முத்தியருள் வந்து.

## தேவாரம்

தினைத்தனையோர் பொறையிலா யுயிர்போங் கூட்டைப்
பொருளென்று மிகவுன்னி மதியா லிந்த
அனைத்துலகும் ஆளலா மென்று பேசும்
ஆங்காரந் தவிர்நெஞ்சே யமரர்க் காக
முனைத்துவரு மதில் மூன்றும் பொன்ற
அன்று முடுகியவெஞ் சிலை வளைத்துச் செந்தீமூழ்க
நினைத்தபெருங் கருணையன் நெய்த் தான மென்று
நினையுமா நினைந்தக்கா லுய்ய வாமே

## திருவாசகம்

திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
உருநாம் அறியஓர் அந்தணனாய் ஆண்டு கொண்டான்
ஒருநாமம் ஓருருவம் ஒன்றும் இல்லாற்காயிரம்
திருநாமம் பாடி நாந் தெள்ளேணங் கொட்டாமோ.

## திருவிசைப்பா

திக்கடா நினைந்து நெஞ்சிடிந்து உருகும்
திறந்தவர் புறத்து இருந்து அவச
மைக்கடா அனைய என்னை ஆள் விரும்பி
மற்றொரு பிறவியில் பிறந்து
பொய்க்கடா வண்ணம் காத்து எனக்கருளே
புரியவும் வல்லரே எல்லே
யக்கடாவாகில் அவரிடங் களந்தை
அணிதிகழ் ஆதித் தேச்சரமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கும்
அண்டத்தொடும் உடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற் கோயிலும்
போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமும்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத்துக்குப் பரிசு வைத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

திசைமுழுதும் கணநாதர் தேவர்கட்கு முன்னெருங்கி
மிசைமிடைந்து வரும்பொழுது வேற்றொலிகள் விரவாமே
யசையவெழுங் குழல்நாத்து அஞ்செழுத்தால் தமைப்பரவும்
மிசைவிரும்புங் கூத்தனார் எழுந்தருளி எதிர்நின்றார்

## திருப்புகழ்

உம்பர்தரு தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலில் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேன்பருகி பலகாலும்
எந்தனுயிர்க் காதரவுற் றருள்வாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவலத்தாளருள்கைக் கனியோனே
அன்பர் தமக்கான நிலை பொருளோனே
ஐந்துகரத்தானைமுகப் பெருமானே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சோமசுந்தரம் விக்னேஸ்வரன் அவர்களின் வாழ்க்கை வரலாறு

இந்து சமுத்திரத்தின் இலங்கும் முத்தெனத்திகழும் ஈழவள நாட்டின் வடபகுதியில் யாழ்ப்பாணன் பாடி பரிசுபெற்ற யாழ்ப்பாணக்குடாநாட்டின் புகழ்மிகுபதியாம் வறுத்தலை விழான் என்னும் சிற்றூரின் உயர்வேளாண்குல வழித்தோன்றலின் அருணாசலம் பொன்னம்மா தம்பதிகளின் அருமைப் புதல்வன் சோமசுந்தரம் ஊரெழுப்பதியில் சிறப்புடன் வாழ்ந்த இராமலிங்கம் இளையபிள்ளை தம்பதியினரின் சிரேஸ்ட புதல்வி நேசமணியை 1945ல் கரம்பற்றினார். ஊரெழுப்பதியில் தம் இல்லறவாழ்வை இனிதே ஆரம்பித்து பலாலி வீதியில் ஊரெழுப்பிள்ளையார் ஆலய அருகே அமைந்த "அம்மன் ஸ்ரோர்ஸ்" என்னும் பலசரக்கு விற்பனை நிலையத்தை சிறப்புடன் நடத்தி தன்வாழ்வை வளப்படுத்தினார். இத்தருவேளையில் அருமைச் செல்வியாய் தர்மநாயகி எனும் பெண் மகவைப் பெற்று சிறப்புற வளர்த்தனர். ஆண்மகவு வேண்டும் என்று விநாயகரின் வரம் வேண்டி 1955.10.31 ஐப்பசித்திங்களில் வந்துதித்த ஆண் மகவுக்கு விக்னேஸ்வரன் என்னும் நாமத்தைச் சூட்டி கண்ணுறப் போற்றினர். செல்லமாக ராசா என்றும் எல்லோரும் அழைத்து மகிழ்ந்துவரும் நாளில் 1957ல் சிவனருட்செல்வனாக சிவனேஸ்வரனும் மகவாய் தோன்றினார். மூத்தமகனாய் பிறந்த விக்னேஸ்வரன் இளமையிலேயே சுறுசுறுப்பான நடத்தையும் கலகலப்பான சுபாவமும் எல்லோரையும் பேச்சினால் கவரக்கூடிய திறனும் கொண்டவராகத் திகழ்ந்தார். தனது ஆரம்பக்கல்வியை ஊரேழு கணேச வித்தியாசாலையில் கற்று வரும் வேளையில் இவரது பத்தாவது வயதில் தந்தையாரை இழக்க நேரிட்டது. பிஞ்சு வயதில் பேரிடியாக அமைந்தது அவர்களது கடை தீப்பற்றிய போது தீக்காயம் ஏற்பட்டு தந்தையார் மரணமானார். பிள்ளைகள் தாயாரின் நிழலில் வாழத்தொடங்கினார். சகோதரியான தர்மநாயகி தனது பத்தொன்பாதவது வயதில் ஊரெழுவின் உயர்குலத்தொன்றலாகிய தம்பிஜயா கந்தநாதனை தனது வாழ்கைத் துணையாகப் பெற்றுக் கொண்டார். கணவர் தொழில் புரிந்த கம்பளை நகரில் தமது இல்லற வாழ்வை ஆரம்பித்தனர். அவர்களது மணவாழ்வில் பாரதி, நந்தன், அரவிந்தன் எனும் பிள்ளைகள் அவதரித்தனர். 1977ம் ஆண்டு அருமைத்தாயார் நேசமணி திடீர் மாரடைப்பால் மரணமடையவே அளவு கடந்த துயரத்துக்கு உள்ளானார்கள். சகோதரி மைத்துனர் உதவியுடன் தாயார் நடாத்திய பலசரக்கு நிலையத்தை பொறுப்பெடுத்து நடாத்தி தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயமுயற்சியில் வாழத்தொடங்கினார். அன்னாருக்கு வழிகாட்டியாக மாமனார் இராசேந்திரமும் மைத்துனர் கந்தநாதனும் தம்பி சிவனேஸ்வரனும் உற்ற துணையாயிருந்தனர். இவரது விருப்பத்திற்கிணங்க தென்மராட்சியில் வசித்த ரகுநாதன் சிவனேஸ்வரியின் புதல்வி சுகந்தியை மணம் முடிக்க அனுசரணையாக இருந்தார்.

மீண்டும் துன்பம் வன்செயலில் வந்து 1987இல் கடை உடமைகள் அழிக்கப்பட்டு துன்பத்திற்குள்ளானார். அதன் பின் தேசிய பாதுகாப்பு சேவை உத்தியோகத்தராக கடமை புரிந்து இறை பணியிலும் ஈடுபட்டார். இந்நிலையில் மீசாலை என்னும் சிற்றூரில் அருள்மிகு இராமாவில் முருகன் ஆலயப்பணியில் அதிக கவனம் எடுத்து அக்கோவில் தர்மகத்தாவுடன் இணைந்து கோவில் பொறுப்பேற்று நடாத்தி வரும்நாளில்

"அன்பும் அறனும் உடைத்தாயின்
இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது"

ஏன்ற வள்ளுவர் கூற்றுக்கு இணங்க இல்லறமாம் நல்லறத்தில் ஈடுபட வேண்டி யாழ்ப்பாணக் குடா நாட்டின் சிறப்பு மிகு தென்மராட்சியின் சாவகச்சேரி சங்கத்தானை எனும் சிற்றூரில் வழித்தோன்றல்களாக வாழ்ந்து வந்த தம்பதியரான சின்னத்தம்பி தங்கம் ஆகியோரின் ஐந்தாவது புதல்வியாகிய சோதிகலாவை 13.09.1992 இல் உற்றார் உறவினர் நண்பர்கள் சூழ்ந்து வாழ்த்தி நல்லாசி கூற இணைந்து கொண்டனர். (இருவருமே தாய் தந்தையர் அற்ற நிலையில்) புதுமணத்தம்பதிகள் இல்லறம் என்னும் நல்லறத்தில் இணைந்து மனைவி தையல் ஆசிரியராகப் பணிபுரிந்த நிலையில் படித்த மகளீர் திட்டத்தில் (farm) சிறப்புடன் வாழ்ந்து வந்தனர்.

வந்தோரை வரவேற்று சிரிக்கச்சிரிக்கப் பேசி பகிடிகள் பல பேசி குசலம் விசாரித்து விருந்தோம்பல் செய்வதே அவரின் சந்தோசம். இவரிடையே காணப்பட்ட மிகச்சிறந்த குணம் உற்றார் உறவினர்க்கு தன்னால் இயன்றளவு உதவி செய்தல். அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கு பற்றி என்ன செய்ய வேண்டும் என்பதை தானாகவே கேட்டறிந்து முழுமனத்துடன் சலிப்பின்றி செய்தல். இவர் தாய் தந்தையரை இழந்திருந்தும் மனைவியின் அன்பான உபசரிப்பாலும் சகோதர, சகோதரி மற்றும் சிற்றன்னை சகோதர சகோதரிகள், மைத்தனர் மைத்துனிகளுடனும், பெறாமக்கள், மருமக்களுடனும் மகிழ்ச்சியோடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்போடும் வாழ்ந்து வரும்நாளில் தமக்கு ஒரு மழலை செல்வம் இல்லையே என்று மனத்துயர் கொண்டு தம் மனச்சுமையை தெய்வத்திடமே முறையிட்டு வேண்டியதால் **30.09.1996** இல் புரட்டாதித் திங்களில் அருமைச் செல்வமாக வந்ததுதித்த ஆண் மகவு கௌரி நோன்பின் **21**ம் வருடத்தின் விரதகாலத்தில் பிறந்த அற்புதத்தால் "கௌதமன்" என்னும் திருநாமம் சூட்டி சிறப்புடன் வாழ்ந்து வரும் நாளில் திரும்பவும் **2000**ம் ஆண்டு ஆனித்திங்களில் சகல உடமைகளும் அழிக்கப்பட்டு வலிமேற்குப் பிரதேசத்தில் வீடுகள் பல மாறி வாழ வேண்டிய நிலையிலும் தமது செல்வத்தை சிறப்பாகக் கல்வி கற்பிக்க எண்ணி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் **2002**ம் ஆண்டு ஆரம்பக்கல்வியை தொடக்கி வைத்தனர். மனைவி தையல் ஆசிரியராகப் பணி புரிந்து தையல் நிலையத்தையும் சிறப்புடன் நடாத்தி வாழும் நாளில் எதிர்பாராத பேரிடியாக ஏற்பட்ட நெஞ்சுவலி செங்கண்மாரி காரணமாக யாழ் போதனா வைத்தியசாலையில் **02.09.2012** அன்று அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு அன்று தொடக்கம் மனைவியும் மகனும் அரும்பாடுபட்டு வரும் வேளை நோய் குணமடையாத நிலையில் வேண்டாத தெய்வம் இல்லை இறுதியில் **13.10.2012** அன்று அவசர சிகிச்சைப்பிரிவில் டாக்டர்களின் ஆபத்தில்லை என்ற கூற்றின்படி ward 9 இல் அனுமதிக்கப்பட்டு அன்றே அவர் உடல்நிலை மோசமான நிலை கண்டு மனைவி துயரமடைந்து தன் மடியில் வைத்து கண்ணீர் சிந்திய படி கலங்கித் துடிக்கும் நேரம் இரவு **12.45** மணிக்கு மனைவியின் கையால் பால் அமுது உண்ணும் போது அவரது உயிர் பிரிவதை அறிந்த மனைவியால் தன் துயரத்தை நெஞ்சில் வைத்து அமுக்கி மடியில் வைத்து பஞ்சபுராணம் படித்து அவரின் ஆவி சிவனின் அருட்பாதக் கமலங்களைச் சென்றடைந்து அமைதியுற்றுச் சாந்தி பெற்றது.

அனைவருக்கும் உத்தமனாக வாழ்ந்த எங்கள் அன்பத் தெய்வம் எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு **13.10.2012** இல் இவ்வுலக வாழ்வை அகன்று இறையுலகு எய்தினார்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு மனைவியின் ஆறாத்துயரம்

அன்று மணப்பந்தலிலே அழகுப் பொற்தாலி கட்டி ஈருடலும் ஓர் உயிராய் வாழ்வோம் என்று இனிமை சொன்னீர் அன்பு நதியாகும் இல்லறத்தில் இணைந்ததாலே அக மகிழ்ந்து இருபது ஆண்டுகள் வாழ்ந்து இனிய மழலைச் செல்வம் வேண்டுமென்று நாம் செய்த அரும்தவத்தை கண்ணுற்ற கருணைமிகு மிருசுவில் அருள்மிகு தேவியான ஞான துர்க்கையானவர் மாங்கனி மடி மேல வீசி வந்துதித்த மழலைச் செல்வம் மனமுடைந்து அப்பா! என்று கதறியழ எங்கே ஐயா சென்றீர். என் நினைவெல்லாம் கானல்நீர் போல் ஆனதய்யா உறக்கமின்றி பதறியழுகின்றேன். என் இனிய செல்வரே விசும்பின் துளிகாணா விளை பயிர் போலானேன் பசும்பொன் மேனிவிட்டு பார் அகன்றீர்.பாவியானேன் உறக்கமின்றி ஏங்கியழுகின்றேன். இனி என்னை தேற்றுவார் யார் ஐயா?

அன்பின் திருவுருவே மணமாலை சூடி மாப்பிள்ளையாய் வந்த கோலம் என் மனதை விட்டு அகலுமுன்பே

அவசரமாய் மாப்பிள்ளைக் கோலத்துடன் எங்கய்யா சென்றீர்! இல்லறம் இன்பமாய் அமைந்த வேளையிலே உங்கள் செல்லக்குட்டி கௌதம் அப்பா டேய் என்று அழைப்பது என் காதில் கேட்கிறதே சோதி என்று பாசமாய் அழைத்தீர்களே உங்கள் அன்பான பேச்சும் நகைச்சுவையான வார்த்தையும் என் காதை விட்டகலவில்லையே உங்களின் ஒவ்வொரு நினைவலைகளும் எனக்கு நிழலாகத் தெரியுதைய்யா.

உங்கள் ஞாபகம் என் உயிர் உணர்வுள்ள வரை மாறாது மறக்காது. இன்று உங்களை விட்டும் பிரிந்து உங்களுடைய செல்வத்துடன் மனம் கலங்கி வாழும்.

உங்கள் பிரியமான மனைவி,
சோதிகலா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகனின் மாறாக் கவலை

கௌதக் குட்டி என்று அள்ளி எனைக் கொஞ்சிய ஆசை முகம் அணைந்ததுவோ.

துள்ளி நான் விளையாட தூக்கி எனை அணைப்பீர்களே பாசப் பறவைகள் நாம் சிறுகூடு என்றீர்கள் இன்று அந்தப் பொல்லாத காலன் கூட்டை பிரித்துத்தான் எடுத்தானோ?

அப்பா! அப்பா என்று நான் கதறி அழுகையிலே என் அம்மா படும் ?துயரம் நீங்கள் அறிவீர்களோ பாடசாலை சென்றால் சந்தியில் நீங்கள் வரும் காட்சி நிழலாய் தெரியுதே நெஞ்சு வெடிக்குதே அப்பா! நீங்கள் வீட்டில் பாயில் படுத்திருந்து பாலமுதம் உண்ணாமல் நோயில் வருந்துவதை நான் நோக்கிச் சலிக்காமல் ஆஸ்பத்திரியில் என் அன்னையின் மடியில் ஆவி பிரிந்ததே வேதனையில் தவிக்கிறேன். வெந்தணலில் புளுவாய் துடிக்கிறேன். பொன்னான தாலியொடு பூவும் பொட்டும் அழியாமலிருந்த என் அன்னை முகம்

பொலிவிழந்து பொழுதெல்லாம் பொங்கியழும் என் அம்மாவை கண் கொண்டு பார்க்கும் பாவியானேன்.

அப்பா வெற்றிலை போடும் உங்கள் ஆசை முகம் என் நெஞ்சை விட்டு அகலவில்லையே.என்றுமே கலங்காத உங்களின் கண்களில் U.K இருந்து அத்தை T.P யில் கதைத்து அழும் போது கன்னத்தில் நீர் வடிய அக்கா! என்றீர்களே அதை நினைத்து என் கண்ணில் நீர் வடியா நாளேயில்லையப்பா.

அப்பா சம்பள நாளில் எனக்கென்று பொக்கற் மணி தந்த பின்பே தான் மிகுதி அம்மா கையில் கொடுப்பீர்கள். இனி உரிமையுடன் நாம் யாரைக் கேட்போம் அப்பா. தினமும் நீங்கள் வேலை முடிந்து வரும் போது எனக்குப் பிடித்த பட்சணங்கள் தந்து தம்பி என்று கட்டியணைக்கும் நாள் இனி வருமா? நான் படித்து பட்டம் பல பெற வேண்டும் என்று ஆவலுடன் இருந்தீர்கள் எல்லாம் மறந்து இறைவனின் திருப்பாதக் கமலத்தை அடைந்தீர்கள். நாளெல்லாம் கோயில்கள் வழிபட்டதற்கு தண்டனையாக இறைவன் பாதி வயதில் தன்னிடம் அழைத்தாரோ! உங்கள் ஆசையை நிறைவேற்றுவதே என் இலட்சியமப்பா. உங்கள் ஆத்ம சாந்திக்காக ஊரெழு விநாயகரை வேண்டி வணங்குகின்றேன்.

உங்கள் செல்ல மகன்,

கௌதக்குட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்காவின் ஆதங்கம் (U.K) தர்மநாயகி

கண்போலத் தம்பி எனக் காத்து வளர்தேனே
கண்காணத் தேசத்தில் நாமிருக்க காவியமானாயோ
மெத்தமிகு பாசமாக எம்மோடும் எம் மக்களோடும்
இருந்த எம் அருமைத்தம்பி ராசா
இனி எப்பிறப்பில் ஐயா உன்னைக் காண்பேன்
உன் மனைவி மக்களுடன் சீரும் சிறப்புமாய்
வாழ்வாய் என்று எண்ணியிருந்தேன்
எமதர்மன் செயலுக்கு என்னையா நீ செய்வாய்
உன் உயிராம் உறுதுணையாள்
அருமை மைந்தன் அன்னமின்றியழும்
காட்சி அக்கா மனதை உருக்குதையா
உன்அழகும் உன்அறிவும் உன்முகம்
காண இரந்தேங்கியழுகின்றேன்
மன்னவனே மாசற்ற மாண்புமிகு தம்பி
எங்கள் வீட்டுக்கு நீ ராசா வென்றெ
ராசா! தம்பிக்கண்டு என்றழைத்தோம்
உன் மலரடிகள் கண்ணொத்தி
மாண்புடனே வாழ்வோம்
எங்கள் உயர்வினிலே உன்னை
நாம் மறவோம் எழிலழகு
என் அருமைத்தம்பி இறைபூததாள் சேர்மின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்புத்தம்பியின் மனத்துயர் சிவனேஸ்வரன் (இந்தியா)

அண்ணா! ஆண்ணா! என்று அழுது கலங்கிநேன்
என்தென்றும் உன்விதனம் என்நெஞ்சில்
என்னை விட்டு இவ்வளவு விரைவாய் செல்வாயென்று
நான் எதிர்பார்க்கவில்லை அண்ணா
எத்தனை நாள் போனாலும் என் ஏக்கம் தீராது
உத்தமனே உள்ளத்தில் தூயவனே என் அண்ணா
உன்னைக்காணாத கதைக்காத பாவியாய்
கடல் கடந்து கண் கலங்கி நிற்கின்றேன்

## அருள்மிகு சங்கத்தானை மீனாட்சியம்மன்

பூர்வீக வரலாறு பலவும் கொண்டருளும்
புகழ்பூத்த பதியாம் சங்கத்தானையிலே கோயில் கொண்டு
ஆர்வமோடு தொழவரும் அடியார்க்கெல்லாம்
அருள்மாரி யொழிந்தருளும் அற்புதத்தாயே
கார் சுமந்த கருங்கூந்தல் கருணைமிகு மீனாட்சியம்மா
அன்பு கொண்டு அனைவரையும் மதித்து வாழ்ந்த விக்னேஸ்வரன்
பார்புகழ்ந்த வாழ்வொழிந்து உன்பாதம் வந்தானை
பாதுகாத்தருள்வாயே.

## மைத்துனர், மைத்துனி புலம்பல்

ஆரோடு நோவோம்...? நாமும் ஆர்கெடுத்துரைப்போம்
நாம் படும் வேதனையை எவ்வாறு தானுரைப்போம்
மைத்துனர் என்ற மணிமகுடம் மண்ணில்
சரிந்ததென்று எம்காதோ உம் சேதி
வரக்கலங்கி நின்றோம் கன்னமதில் நீர்வழிய
உத்தமனே உள்ளத்தூயவனே
சாந்தி பெற ஊரேழு விநாயகரை
வேண்டி வணங்குகின்றோம்

மைத்துனர் கந்தநாதன் (U.K)
மைத்துனி சுகந்தி (U.K)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேறாமக்கள் புலம்பல்

அள்ளி எமைக் கொஞ்சிய ஆரைமுகம்
அணைந்து போச்சு
துள்ளி விளையாட தூக்கி அணைத்த
வெள்ளையுள்ளம் கொண்ட எங்கள்
மேன்மை மிகு பெரியப்பா
எள்ளி நகையோடும் எங்கள் பெரியப்பா
எங்கு சென்றீர்

ரேகா ,டினேஸ் ,சிந்துஜா,
இந்தியா

## மருமக்கள் புலம்பல்

காவியமாம் நின்ற எங்கள் கருணைமாமா
பாரிற்பகலோன் ஒளி போன்ற எங்கள் ராசாமாமா
இனிய நற்சிரிப்பு என்றும் மறையாது
எத்தனை நாள் போனாலும் எம் ஏக்கமதுதீராது
என்செய்வோம் மாமாவே இறைதாளில் அமைதிகொள்க

பாரதி,நந்தன்,அரவிந்தன் (U.K)

## மருமக்கள் மனத்துயர் (துவாரகா)

காவியமாய் நின்ற எங்கள் கருணைமாமா
எங்களுக்கு கண்போன்ற மகள் நீதான் என்றீர்
கண்போல் என்பிதா வளர்த்த கண்(மணியை)
காலமெல்லாம் காத்திடுவீர் என்றே உமக்கீந்தார்
பாதிவயதினிலே பாரை விட்டு நீர் சென்று
எண்ணியெண்ணி ஏங்கியழ வைத்துச் சென்றீர்
எம்மினிய மாமாவே எமதாமன் செயலுக்கென்செய்வீர்
உத்தமரே உள்ளத்தூயவரே சாந்திபெற
விநாயகர்தாள் சேர்மின்

துவாரகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்ப டாக்டர் மனத்துயர் (புஸ்பராணி லியோன்)

யாருக்கும் தீங்கெண்ணாச் சிந்தை கொண்டு
மெத்தமிகு பாசமுடன் எம்முடன் பழகினீரே
நீர் மண்ணில் சரிந்த செய்திகேட்டு கலங்கிநின்றோம்
உம்மனையாள் கரம் பற்றிவந்த நாள் தொடக்கம்
உடன் பிறவாச் சகோதரனே
ராணியக்கா! ராணியக்கா! என்னும் இனிய குரலோசை
என் காதை விட்டகலாதே
கருமனத்து காலனவன் கண்ணில் பட்டு
கலங்கிட வைத்தின்று கனவாயானீர்
ஓவியமாய் எம்மனதில் இடம்பிடித்தீர்
ஒருகாலும் உம்மை மறவோம் நாம் மறவோமே

Dr.புஸ்பராணி லியோன்,
நவாலி

## தேற்றம்

புத்தரோடு காந்தியுடன் இறை மகன் யேசு
புகழார்ந்த மன்னவரும் புவியகல்வார் உண்மை
சித்ரோடு சிவனடியார் செயல்மிக்க வீரர்களும்
செத்துத்தான் போனார்கள் சிவனார் அழைப்பாலே
வித்தானான் விதையானான் எம்மைக்காத்த ராசா
மண்ணிலே மக்கள் என்றோ மடிவார்தானே
நித்தமும் உம் நினைவால் அழுவதால் பயனில்லை
மாண்டவர் மீளாரென அறிந்து ஆறுவோமே
விண்ணக வாழ்வடைய விதி வந்ததிவர்க்கென்று
விடுவோம் கவலை ஆத்மா சாந்திக்காய்
அனைவரும் பிரார்த்திப்போம்

யானே பொய் என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் உனை வந்துறுமாறே
- மாணிக்கவாசகர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவண்ணாமலையில் அருளிச்செய்யப்பட்டது

# திருவெம்பாவை



திருச்சிற்றம்பலம்.

ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும், வாள்தடங்கண்
மாதே! வளருதியோ? வன்செவியோ நின்செவிதான்?
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே, விம்மிவிம்மி மெய்ம்மறந்து,
போதுஆர் அமளியின் மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனும் ஆகாள், கிடந்தாள் என்னே! என்னே!
ஈதே எம்தோழி பரிசு? ஏல் ஓர் எம்பாவாய்!

பாசம் பரஞ்சோதிக்கு என்பாய் இராப்பகல் நாம்
பேசும் போது எப்போது? இப் போதுஆர் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ? நேரிழையாய்! நேரிழையீர்!
சீ! சீ!! இவையும் சிலவோ? விளையாடி
ஏசும் இடம் ஈதோ? விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்புஆர்? யாம்ஆர்? ஏல் ஓர் எம்பாவாய்!

முத்து அன்னவெண் நகையாய்? முன்வந்து, எதிர் எழுந்தென்
அத்தன், ஆனந்தன், அமுதன் என்று அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய், வந்து உன் கடைதிறவாய்
பத்து உடையீர்! ஈசன் பழ அடியீர்! பாங்கு உடையீர்!
புத்தடியோம் புன்மைதீர்த்து ஆட்கொண்டால் பொல்லாதோ?
எத்தோ நின் அன்புடமை? எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ, நம்சிவனை?
இத்தனையும் வேண்டும் எமக்கு ஏல் ஓர் எம்பாவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒள் நித்தில நகையாய்! இன்னம் புலர்ந்தின்றோ?!
வண்ணக் கிளிமொழியார் எல்லோரும் வந்தாரோ?!
எண்ணிக் கொடு உள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்று, அவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கு ஒரு மருந்தை, வேதவிழுப் பொருளை,
கண்ணுக்கு இனியானைப் பாடிக் கசிந்து, உள்ளம்
உள்நெக்கு நின்றுஉருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில், துயில் ஏல் ஓர் எம்பாவாய்!

மால்அறியா, நான்முகனும் காணா, மலையினை, நாம்
போல் அறிவோம், என்று உள்ள பொக்கங்களேபேசும்
பால்ஊறு தேன்வாய்ப் படிறீ! கடைதிறவாய்
ஞாலமே, விண்ணே, பிறவே அறிவரியான்
கோலமும், நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே! சிவனே!என்று
ஓலம் இடினும், உணராய், உணராய்காண்
ஏலக் குழலி பரிசுஏல்ஓர் எம்பாவாய்!

மானே! நீ, நென்னலை, நாளை வந்து உங்களை
நானே எழுப்புவன் என்றலும், நாணாமே
போன திசை பகராய் இன்னம் புலர்ந்தின்றோ?
வானே, நிலனே, பிறவே, அறிவரியான்
தானே வந்து, எம்மைத் தலையளித்து, ஆட்கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குஉன் வாய்திறவாய்
ஊனே உருகாய், உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்கும் தம்கோனைப் பாடுஏல்ஓர் எம்பாவாய்.

அன்னே இவையும், சிலவோ? பல அமரர்
உன்னற்கு அரியான், ஒருவன், இரும்சீரான்,
சின்னங்கள் கேட்பச், சிவன்என்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம், தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்அரையன், இன்அமுதுஎன்று எல்லோமும்
சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ?
வன்நெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசு? ஏல் ஓர் எம்பாவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழி சிலம்பச், சிலம்பும் குருகெங்கும்:
ஏழில் இயம்ப, இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி, கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ?
வாழி ஈதுஎன்ன உறக்கமோ? வாய்திறவாய்!
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ!
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை,
ஏழை பங்காளனையே பாடு! ஏல் ஓர் எம்பாவாய்!

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே!
உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீர் அடியோம்
உன்னடியார்தாள்பணிவோம்ஆங்கவர்க்கே பாங்காவோம்:
அன்னவரே எம்கணவர் ஆவார் அவருகந்து
சொன்னபரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்னவகையே எமக்கு எம்கோன் நல்குதியேல்,
என்ன குறையும் இலோம் ஏல் ஓர் எம்பாவாய்

பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதுஆர் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே!
பேதை ஒரு பால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல்: விண்ணோரும், மண்ணும், துதித்தாலும்,
ஓதஉலவா ஒருதோழன் தொண்டர் உளன்
கோதுஇல்குலத்துஅரன்தன்கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவன் ஊர்? ஏதவன் பேர்? ஆர் உற்றார்! ஆர்அயலார்?
ஏதவனைப் பாடும் பரிசு?ஏல் ஓர் எம்பாவாய்!

மொய்ஆர் தடம்பொய்கை புக்கு, முகேரென்னக்
கையால் குடைந்து, குடைந்துஉன் கழல்பாடி,
ஐயா! வழிஅடியோம் வாழ்ந்தோம்காண் ஆர்அழல்போல்
செய்யா! வெண் நீறுஆடி! செல்வா! சிறுமருங்குல்
மைஆர் தடம்கண் மடந்தை மணவாளா!
ஐயா! நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும்வகை எல்லாம், உய்ந்தொழிந்தோம்
எய்யாமல் காப்பாய் எமைஏல்ஓர் எம்பாவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்: நற் தில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன்: இவ்வானும், குவலயமும், எல்லோமும்,
காத்தும், படைத்தும், கரந்தும், விளையாடி,
வார்த்தையும் பேசி, வளைசிலம்ப, வார்கலைகள்
ஆர்ப்பு அரவம் செய்ய, அணிகுழல் மேல் வண்டார்ப்ப,
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இரும்சுனை நீராடு ஏல் ஓர் எம்பாவாய்!

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால், பின்னும் அரவத்தால்,
தங்கள் மலம்கழுவு வார்வந்து சார்தலினால்,
எங்கள் பிராட்டியும் எம்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில், புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தர்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்க
பங்கயப்பூம் புனல் பாய்ந்தாடே ஏல் ஓர் எம்பாவாய்!

காதார் குழைஆடப், பைம்பூண் கலன்ஆட,
கோதை குழல்ஆட, வண்டின் குழாம்ஆடச்,
சீதப் புனல்ஆடிச் சிற்றம்பலம் பாடி,
வேதப் பொருள்பாடி, அப்பொருளா மாபாடி,
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி, அந்தமா மாபாடி,
பேதித்து நம்மை, வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத்திறம் பாடி, ஆடேல் ஓர் எம்பாவாய்!

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாய்ஓவாள் சித்தம் களிகூர
நீரொருகால் ஓவா நெடும்தாரை கண்பனிப்பப்
பாரொருகால்வந்தனையாள்விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்து ஒருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி,
ஏருருவப் பூம்புனல்பாய்ந்து ஆடேல் ஓர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற், சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னில் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள், நமக்குமுன் சுரக்கும் இன் அருளே
என்னப் பொழியாய் மழையேல் ஓர் எம்பாவாய்.

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்,
எங்கும் இலாததுஓர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி! நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்,
செங்கமலப் பொற்பாதந் தந்தருளும் சேவகனை,
அங்கண் அரசை, அடியோங்கட்கு ஆர்அமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலம்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடேல் ஓர் எம்பாவாய்!

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவிக் கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி, ஆணாய், அலியாய்ப் பிறங்குஒளிசேர்
விண்ணாகி, மண்ணாகி, இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமும் ஆய், நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந்து ஆடேல் ஓர் எம்பாவாய்!

உங்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம்என்று
அங்குஅப் பழம்சொல் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான், உனக்குஒன்று உரைப்போம்கேள்!
எங்கொங்கை நின் அன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்குஅல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல்எம்கண் மற்றுஒன்றும் காணற்க,
இங்கிப் பரிசே எமக்குஎம்கோன் நல்குதியேல்,
எங்குஎழில்என் ஞாயிறு எமக்கு? ஏல் ஓர் எம்பாவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றி! அருளுகநின் ஆதி ஆம் பாதமலர்
போற்றி! அருளுகநின் அந்தம் ஆம் செந்தளிர்கள்
போற்றி! எல்லா உயிர்க்கும் தோற்றம் ஆம் பொற்பாதம்
போற்றி! எல்லா உயிர்க்கும் போகம் ஆம் பூங்கழல்கள்
போற்றி! எல்லா உயிர்க்கும் ஈறு ஆம் இணையடிகள்
போற்றி! மால் நான்முகனும், காணாத புண்டரிகம்
போற்றி! யாம் உய்ய ஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றி! யாம் மார்கழி நீராடேல் ஓர் எம்பாவாய்!

(திருவெம்பாவை பாடல் முற்றிற்று)

❀❀❀

உங்களால் மகத்தானது என்று ஏற்கப்பட்ட ஓர் இலட்சியத்திற்காக இந்த உயிர் பயன்பட வேண்டும். இந்த உடலைக் கட்டையில் வைப்பதற்கு முன் உடலானது உழைத்து ஓடாய்ப் போயிருக்க வேண்டும். இந்த உடலைக் கட்டையில் வைப்பற்கு முன் உயிரானது உழைத்து ஓடாய்ப் போயிருக்க வேண்டும். உலகம் என்னை மகிழ்ச்சியாக வைத்திருக்கப் பாடுபடவில்லையே என்று அலுத்துக்கொண்டிராமல், வேதனைகளுத் துயரங்களும் நிறைந்த சன்னி பிடித்த சுயநலங்கொண்ட ஒரு மண்கட்டி போல் இல்லாமல் இயற்கையின் சக்தியாக உயிர் விளங்க வேண்டும். அதுதான் வாழ்க்கையின் உண்மை மகிழ்ச்சி.

-பேனாட்சோ-

ஒரு மகன் தன்னுடைய தந்தைக்கு ஆற்றும் உதவி என்னவென்றால் இவனுடைய தந்தை இவனைப் பெற்றெடுப்பதற்கு என்ன தவம் செய்தாரோ என்று வியப்புறும்படி நடத்தலாகும்.

யாரிடமிருந்து உலகிற்கு இடர் இல்லையோ யார் உலகத்தில் நின்று இடர்ப்படுவ தில்லையோ, இன்னும், யார் களிப்பு, கோபம், அச்சம், கலக்கம், இவைகளில் நின்று விடுபட்டவனோ அவன் எனக்கு உகந்தவன்.

பகவத் கீதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவராய சுவாமிகள் அருளிய

# கந்த சஷ்டி கவசம்



காப்பு

நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்லினைபோம் துன்பம்போம் நெஞ்சில்
புதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்(து) ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசம் தனை.

குறள்வெண்பா

அமரர் இடர் தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

சஷ்டியை நோக்க சரவண பவனார்
சிஷ்டருக்கு குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பண்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிங்கிணி ஆட
மையல் நடம் செய்யும் மயில்வாகனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலால் எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலன் நித்தம் வருக
சிரகிரி வேலன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டு இலங்க
விரைந்து எனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
ஊய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளிரொளி ஐயும்
நிலைபெற்று என்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செய் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்த
நன்மணி பூண்ட நவரத்தின மாலையம்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செம்பழகு உடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நுவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இரு தொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகன
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விந்து வந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
ஏன்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்(று)
உன்திரு வடியை உறுதியென்று எண்ணும்
என்தலை வைத்து உன் இணையடி காக்க
என்னுயிர்க்கு உயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேள் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேள் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாண் ஆம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க
வுட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடி இணை அருள்வேல் காக்க
கைகள் இரண்டு கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்கை இரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டுக்
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பலகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடிவேலால்
புற்று பற்று பகலவன் தணலெரி
துணலெரி தணலெரி தணல் அதுவாக
விடுவிடு வேலை வெருண்டு அதுஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
குடிவிட விஷங்கள் கடித்து உயர் அங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்புப் பித்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
புக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடு அனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர் களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்து ஓடிட
ஆனை அடிணினில் அரும் பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனம் ஒருவழி போக்கம்
ஆடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாள் எனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லாது ஓட நீ எனக்கு அருள்வாய்
ஈரேழு உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகளொளி பவனே
பரிபுர பவனே பவம்ஒளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்து தேவர்கள் கடும்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
துணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்து உறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தில் மாமலை உறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத்து அரசே
காரார் கழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யான் உனைப் பாட
உனைத்தொடர்ந்து இருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசம் ஆக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பூாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன் அருளாக
அன்புடன் இரக்ஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவள் ஆமே
பிள்ளையென்று அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன் என்மீதுன் மனம்மகிழ்ந்து அருளித்
தஞ்சம் என்றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேசமுடன் ஒரு நினைவது ஆகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத்து ஆறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறு அணிய
அட்டதிக்கு உள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்த்தங்கு அருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல்லெழில் பெறுவர்
எந்தநாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்காரத்து அடி
அறிந்து எனக்கு உள்ளம் அட்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்து உணவாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்து அமுதளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
என்னைத்தடுத்து ஆட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே
மயில்நடம் இடுவாய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.
-கந்தர் சஷ்டி கவசம் முற்றிற்று-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அமரர்.அருணாசலம் சோசுந்தரம்

❀❀❀



அமரர்.சோசுந்தரம் நேசமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கண்ணீர்க் காணிக்கை

மலர்வு

31

10

1955



உதிர்வு

14

10

2012

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் சங்கானை, மாவிகாவத்தையை
தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட

## அமரர் சோமசுந்தரம் விக்கினேஸ்வரன் அவர்கள்

புன்னகை பூக்கும் உங்கள் முகமும்
அன்புடன் அரவணைக்கும் பண்பும்
அழிந்ததோ பெரியப்பா!
பாசமுடன் எமைக்காண ஓடோடி வருவீரே
உம் முகம் இனி எப்போது காண்போம் பெரியப்பா!!

வாடாமல் வதங்காமல் வருத்தம்
உமைப் பெரிதும் வாட்டாமல்
பாதி வயதல்லோ பெரியப்பா!
பாரினிலே பரிதவிக்க விட்டு சடுதியாக
எமைவிட்டு சென்றதென்ன பெரியப்பா!!

இனி வையத்தில் உம்மைப்போல்
எவரைக் காண்போம் என்று சிந்திக்கும் போது
நெஞ்சுருகி செயலிழந்து நிற்கிறோமையா
எம் அன்பைத் தேடி வருவீர்களா?

உங்களுக்காக ஏங்கும்
பெறாமக்கள்
ரூபா, தம்பி

15.10.2012



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தாயின் மடியின்

31 - 10 - 1955



ஆண்டவன் மடியின்

13 - 10 - 2012

தரம் 11இல் எம்மோடு கல்வி பயிலும் சகோதர மாணவன்
கௌதமனின் பாசமிகு தந்தை

அமரர்

## திரு.சோமசுந்தரம் விக்னேஸ்வரன்

காலன் இட்ட கட்டளையைக்
காப்பாற்ற வேண்டும் என்று!
காணாத தேசத்திற்கு
காற்றாய்ப் பறந்து விட்டீர்!
நோய்களிலும் கொடிய நோய் - உமக்கு
துயரத்திலும் பெரிய துயரம் - எமக்கு
உற்ற உறவுகளை பாரினில் தவிக்கவிட்டு!
உம் உயிரை பாதியில் எடுத்தானோ!
உம் மறைவால் நாமிங்கு
கண்ணீரில் மூழ்குகின்றோம்!

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி

பிரிவால் துயருறும்
யா/யாழ்ப்பாணக் கல்லூரி தரம்
11 மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி கல்வி நிலையத்தினரின்

## கண்ணீர் அஞ்சலி

தாயின் மடியில்
31
*
10
*
1955



ஆண்டவன் அடியில்
13
*
10
*
2012

தரம் 11இல் எம்மோடு கல்வி பயிலும் சகோதர மாணவன்

கௌதமனின் பாசமிகு தந்தை

# அமரர். திரு.சோமசுந்தரம் விக்னேஸ்வரன்

எங்கள் பாச உறவுகளை தவிக்கவிட்டு எங்கே !

மறந்து பறந்து சென்றாயோ!

எம் இதயங்கள் கனக்குதையா நீ மறைந்தசெய்தியால்!!

பதறுதையா நெஞ்சம் உன் இழப்பை ஈடுசெய்ய யாரால் முடியும் ஐயா!!!

நீ மறைந்த செய்தியினை - மறுக்குதையா!!!

பூமியிலே பலர் போற்ற வாழ்ந்த உன்னை விதி வந்து சதி செய்து விட்டதே ஐயா!!!!

எங்கள் பாச உறவுக்கு எம் இதய அஞ்சலிகளை காணிக்கையாக்கி

உம் ஆத்ம சாந்திக்காய் அனுதினம் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு

எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின்

ஆத்மா சாந்திபடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாரதி கல்வி நிலையம்
சித்தன்கேணி

[illegible]
அதிபர், ஆசிரியர்கள்,
தரம் 11 மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க்காணிக்கை

வலிகாமன்ஸ் உரிமையாளரான சோதிகலா அவர்களின் அன்புக்கணவன்

## அமரர்
## சோமசுந்தரம் விக்னேஸ்வரன்

(சங்கானை)

கலைந்த கலைமேகம்
கைகூடி விட்டதய்யா
கண்டுவந்த உறவுகள்
கனவாகிப் போனதய்யா
காவல் நீர் எல்லாம்
கலங்கித் தவிக்குதய்யா
கலைந்த உன் உறவு
எம்மை தவிக்கவிட்டதய்யா
குடும்பம் எனும் கோவிலிலே
குலையம் போற்ற வாழ்ந்தீர்களே

புன்சிரிப்புடன் அரவணைத்து
இன்று...
எமை கதறவிட்டு..
உற்றார் உறவினரைத் தவிக்கவிட்டு
காலனவன் கைப்பிடிக்குள்
சிக்குண்டு போனீர்களே..

தோற்றம்
31 . 10 . 1955



மறைவு
14 . 10 . 2012

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

15.10.2012

பிரிவால் துயருறும்
உ.சா.துஷி
சங்கானை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி கூறுகின்றோம்



"என்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொண்ட மதற்கு"

எமது குடும்பத்திற்கு ஒளிவிளக்காயிருந்த **அமரர் திரு சோமசுந்தரம் விக்னேஸ்வரன்** அவர்கள் மறைந்த செய்தி கேட்டு உடன் வந்து உதவியோர், உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர், உள்ளூர் வெளியூர்களிலிருந்து தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்தோர், இரங்கல் செய்திகளையும் வெளியிட்ட அனைத்து உள்ளங்ளிற்கும் மற்றும் நோயுற்ற வேளையில் யாழ் போதனா வைத்திய சாலையிலிருக்கும் போது அவரை வந்து பார்த்தும் தொலைபேசி மூலம் [உள்ளூர், வெளியூர்] தொடர்புகொண்டு ஆறுதல் கூறி பல வழிகளில் உதவியவர்களுக்கும் இறுதி கிரியைகளில் பங்கு பற்றி இரங்கல் செய்திகளை வெளியிட்ட அனைத்து உள்ளங்களிற்கும் மற்றும் யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவச் செல்வங்கள், சித்தன்கேணி பாரதி கல்வி நிலைய ஆசிரியர்கள், மாணவர்கள் அனைத்து உள்ளங்களிற்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று நடைபெறுகின்ற கிரியைகளிலும் ஆத்மா சாந்திப் பிரார்த்தனைகளிலும் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

மாலியவத்தை,
சங்கானை [த.கா]

இங்ஙனம்
மனைவி, மகன்



நிரந்தரம்:
சங்கத்தானை,
சாவகச்சேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சோமசுந்

## அவர்களின் வம்

இராமலிங்கம் + இளையபிள்ளை

- செல்வரத்தினம்
- நேசமணி
- தர்மலிங்கம்
- சிவஞானம்
- முத்தம்மா
- நவமணி
- ராசேந்திரம்

அருணாசல

- சோமசுந்தரம்
- கந்தையா


சோமசுந்தரம் + நேசமணி

- தர்மநாயகி + கந்தநாதன்
  - பாரதி
  - நந்தன்
  - அரவிந்தன்
- விக்னேஸ்வரன்
- சிவனேஸ்வரன் + சுகந்தி
  - ரோகா
  - டினேஸ்
  - சிந்துஜா

ரவி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ந்தரம் விக்னேஸ்வரன்
## ம்சவிருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org